***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 502 / 2017* |
| *Deposition of witness for* | : | *PW : 7* |
| *Name* | : | திருமதி.வள்ளி |
| *Father's Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* **24.04.2025**

எதிரி-6 ஆஜர். எதிரிகள் 2 முதல் 5 வரை நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். பூ விற்பனை செய்து பிழைத்து வருகிறேன். அசா6 பாக்கியலெட்சுமி எனது கணவரின் தம்பி மனைவி ஆவார். அசா5 ஆர்த்தி எனது கணவரின் தம்பி மகள் ஆவார். இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரியை எனக்குத் தெரியாது. இதற்கு முன்னரும் நான் அவரைப் பார்த்தது இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு

அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 11.03.2016ம் தேதி பறையங்குளத்தைச் சேர்ந்த அசா6ன் தம்பி கார்த்திக்ராஜாவிற்கு, அசா5 ஆர்த்திக்கும் திருமணம் நடைபெற்றதாகவும் திருமணத்தின் போது அசா5 கார்ப்பமாக இருந்த விஷயம் எங்கள் குடும்பத்தினர் யாருக்கும் தெரியாது என்றும் திருமணம் முடிந்து 4 மாதங்களே ஆவதால், அசா5ன் கணவர் சந்தேகப்பட்டு கேட்டதற்குப் பின், அசா5 தனது கணவரிடம் சொல்லியிருக்கிறாள் என்றும், அவளாகவே கொந்தகை அரசு மருத்துவமனை சென்று கர்ப்பமான விஷயத்தைச் சொல்லி கேட்டுள்ளாள் என்றும் அவர்கள் ஸ்கேன் எடுதது அதன் ரிப்போர்ட்டைப் பார்த்து சொல்வோம் என்று சொல்லியுள்ளார்கள் என்றும் அதற்கிடையே மதுரையில் சென்று ஸ்கேன் எடுத்துள்ளாள் என்றும் அசா5 தனது தாயார் அசா6 இடம் இதன் விபரம் சொல்லவும்,. அசா5 தவறான வழியில் கர்ப்பமானதால் உன் விருப்பப்படி செய் என்று அசா6 சொல்லிவிட்டார் என்றும் குழந்தையின்னு பிறந்தா ஊர்க்காரங்களுக்கு தெரிந்து அசிங்கமாகிவிடும் அவமானப்படனும் அதனால் இந்த குழந்தை வேண்டாம்னு முடிவெடுத்துள்ளார்கள் என்றும் எங்க ஊர்ல அப்புறம் இரண்டு மூன்று டாக்டர்களிடம் கேட்ட போது, இந்த நிலையில் கலைக்க முடியாதுன்னு சொன்னாங்க என்றும் அதனால் என்ன பன்றதுன்னு தெரியாமல் மதுரை அண்ணாநகரில் இருக்கும் என்னிடம் அசா5ம், அசா6ம் தகவல் சொன்னார்கள் என்றும் நான் அவர்களிடம் விசாரித்து சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு,

09.06.2016ம் தேதி இரவு அசா5 ஆர்த்தியை நான் மதுரை முடக்கத்தானில் உள்ள SS ஆஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்றேன் என்றும் அப்ப அங்கிருந்த டாக்டர்.சந்தி என்பவர் ஆர்த்தியை செக்கப் செஞ்சாங்க என்றும் ஆர்த்திகிட்ட எப்பயிருந்து வலி வந்துச்சுன்னு கேட்டாங்க என்றும் உடனே ஆர்த்தி எனக்கு குழந்தை வேண்டாம்னு சொல்லி அழுதாள் என்றும் உடனே டாக்டர் அசா6 ஐக் கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றும் அப்ப அசா6 நடந்த விஷயத்தைச் சொல்லி குழந்தை பிறந்து, குழந்தையை வீட்டிற்கு தூக்கிச் சென்றால் ஊருக்குள் தலை காட்ட முடியாது என்றும் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வோம் என்றும் கூறி அழுதார் என்றும் அசா6ன் கணவரும், அவரது தம்பியான அசா5ன் கணவரும் ஊருக்குள் தெரிந்தால் ஊரில் அசிங்கமாகப் பேசுவார்கள் என்றும் பிரச்சினை பெரிதாகிவிடும் என்றும் கூறி அழுதார்கள் என்றும் அப்பொழுது டாக்டர் குழந்தையைக் கலைக்க முடியாது குழந்தையைக் கலைத்தால் பெரிய உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்று கூறினார் என்றும் மறுநாள் 10.06.2016ம் தேதி காலையில் அசா5க்கு ஆண் குழந்தை பிறந்தது என்றும் நாங்கள் அந்தக் குழந்தை வேண்டாம் என்பதால் டாக்டரிடம் இந்த குழந்தையை வீட்டிற்குத் தூக்கிச் சென்றால் பிரச்சனை வந்துவிடும் என்றும் குாந்தையை யாரிடம் கொடுப்பது என்ன செய்வது என்பது பற்றி விபரம் எதுவும் தெரியாது என்றும் குழந்தையை யாராவது கேட்டால் கொடுத்துவிடும் படியும் அல்லது எதாவது ஆசிரமத்தில் விட்டு விடும்படியும் கூறி சென்று விட்டோம் என்றும் வெளியில் தெரிந்தால் எங்கள் குடும்ப மானம் போய்விடும் என்பதாலும் அசா5ன் இல்லற வாழ்க்கை பாழகி விடும் என்பதாலும் நாங்கள் அனைவரும் அவமானப்படுவோம் என்றும் மேலும் ஜாதிக் கலவரம் அளவிற்கு பிரச்சனை பெரியதாகிவிடும்

என்பதாலும் தான் நாங்கள் குழந்தை வேண்டாம் என்று சொன்னோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது, டாக்டர் மற்றும் அவரது உறவினர்களைக் காப்பாற்றும் நோக்கில், உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை